2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் இனி இங்கு எப்போதும் இல்லை, உதிரிக் கட்சிகள்தான் உள்ளன என்று உலகத்திற்கு ஸ்ரீரங்கம் மக்கள் பறைசாற்றியுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர், மங்காப் புகழ் பெற்ற மாதரசி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளின் சரித்திரமாய் விளங்குகின்ற இந்த நல்லரசு பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலுள்ள 39 ஊராட்சிகளையும் கிணத்துக்கடவு ஒன்றியத்திலுள்ள 34 ஊராட்சிகளையும் சேர்த்து மூன்றாகப் பிரித்தால் அமைப்பு ரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் பொது மக்களின் வசதிக்கும் உகந்ததாக இருக்கும். மேலும், கேரள எல்லையிலிருந்து நீண்டிருக்கின்ற இவ்விரண்டு ஒன்றியங்களும் இரண்டு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டதோடு, மூன்று தொகுதிகளுக்குள் பிரிந்துள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, மாற்றியமைத்துக் கொடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை எண் 131-ல் உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துதல், பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல், தரமுயர்த்துதல், சேர்த்தல் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத் தீர்மானம்

இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் உள்ளடக்கி கூட்டம் நடத்தப்பட்டு, பெறப்படும் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் கருத்துருவானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அக்கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டு, அதன்மீது அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஒன்றியங்கள் இரண்டையும் மூன்றாகப் பிரிக்கும் கருத்துரு எதுவும் அரசால் இதுவரை பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறுசீரமைப்பின் அடிப்படையிலே ஆரணி சட்டமன்றத் தொகுதியில் செய்யாறு ஒன்றியத்திற்குட்பட்ட 12 பஞ்சாயத்துகள் புதியதாக இணைந்திருக்கின்றன. அங்கு வசிக்கக்கூடிய பெருமளவு மக்களுடைய கோரிக்கை 12 பஞ்சாயத்துகளை ஆரணி சட்டமன்றத் தொகுதியோடு இணைக்க வேண்டும் என்பதாகும். ஏனென்று சொன்னால், அவர்கள் நிருவாக வசதிக்காக செய்யாறுக்கும், சட்டமன்ற விஷயமாக ஆரணிக்கும் வந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆரணிக்குச் செல்வதென்றால் அதிகபட்சமாக அவர்கள் 12 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கின்றது. அதுவே அவர்கள் செய்யாறுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஆரணிக்கு வந்து செய்யாறுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை

2015 பிப்ரவரி 18]

இருக்கின்றது. எனவே, அந்த நிலையை மாற்ற வேண்டும். தொகுதி மறுசீரமைப்பு என்பது நம்முடைய அதிகாரத்தில் இல்லை. ஆனால், இந்த 12 பஞ்சாயத்துகளை ஆரணி ஒன்றியத்தோடு இணைப்பதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறுசீரமைப்பு என்பது நம்முடைய அதிகாரத்தில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். இவர் கேட்ட கோரிக்கை, ஊராட்சிகளைச் சேர்ப்பதாகும். பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கை ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்ததாகும். இரண்டிற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட வேண்டும். மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் அரசு கண்டிப்பாக, அவசியமிருந்தால் அவற்றைக் கனிவுடன் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

கால்நடை மருத்துவமனைகள்

***2917—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள உலகம், அத்திமுகம், உங்கட்டி, ராமன்தொட்டி பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி தேவதை, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு வேப்பனஹள்ளி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரே கேள்வியில் நான்கு கால்நடை மருத்துவமனைகளைக் கேட்டிருக்கிறார்கள். உலகம், அத்திமுகம், உங்கட்டி மற்றும் ராமன்தொட்டி ஆகிய நான்கு பகுதிகளிலே கால்நடை மருத்துவமனைகள் கேட்டிருக்கிறார்கள். உலகம் மற்றும் ராமன்தொட்டி கிராமங்களிலே உள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை, துறை விதிகளுக்குட்பட்டு 5,000-க்கும் மேலாக இருப்பதால், அரசு விதிகளின்படி அங்கே கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறக்கூடிய அரசின் செயற்குறிப்பில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் இடம்பெறும்போது அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அத்திமுகம் கிராமத்திலே ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. உங்கட்டி கிராமத்திலே கால்நடை அலகுகளின் எண்ணிக்கை அரசு விதிகளுக்குட்பட்டு இல்லாமல் 3,000-க்கும் குறைவாக இருப்பதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியம் 42 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியமாக இருக்கிறது. ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு சுமார் 100 கிலோ மீட்டர் தூரமுள்ள ஒன்றியமாகவும் இருக்கிறது. ராமன்தொட்டி, உங்கட்டி மற்றும் உலகம் கிராமங்களைச் சுற்றி சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அனைத்துக் கிராமங்களும் வானம் பார்த்த பூமியாகவே உள்ளன. விவசாயம் பொய்த்துப்போய் இருக்கிற சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பு